# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

**முறையீட்டு மனு எண்: 136/2016/பே**

**ஆணை எண்: 226 /2017**

**நாள் :11 –09–2017**

**திரு. கே. எம். ஷாகுல் ஹமீது,**
**30/182 பெல்ஸ் சாலை,**
**சேப்பாக்கம்,**
**சென்னை – 600 005.** -- **முறையீட்டு மனுதாரர்**

**செயல் அலுவலர்,**
**இளையான்குடி பேரூராட்சி,**
**சிவகங்கை மாவட்டம் –630 702.** -- **எதிர் மனுதாரர்**

## ஆணை

திரு. கே. எம். ஷாகுல் ஹமீது, 30/182 பெல்ஸ் சாலை என்பவரின் 21.02.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தால் 25.02.2016 அன்று பெறப்பட்டு 136/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திரு. கே. எம். ஷாகுல் ஹமீது என்பவர் தனது முறையீட்டு மனுவில் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பேரூராட்சி நிர்வாகம், மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் மீது கீழ்கண்ட புகார்களை தெரிவித்து தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

1. இளையான்குடி பேரூராட்சியில் அரசு நிதியினை கையாள்வதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளது.
2. பேரூராட்சிகளுக்கான ஒப்பந்தங்களில் பேரூராட்சி மன்றமும் நிர்வாகமும் சிண்டிகேட் அமைத்து முறைகேடுகள் நடைபெற்று வருகிறது.
3. ஒப்பந்த பணிகள் வழங்குவதில் மோசடிகள் நடைபெற்று வருகிறது.
4. சர்ச்சைக்குரிய வக்பு வாரிய நிலங்களில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.
5. தமிழ்நாடு வாக்பு வாரிய அனுமதியின்றியும், நீர்ப்பிடிப்பு வாய்க்கால்களை ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களுக்கு பொது நிதியில் இருந்து சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகிறது.
6. விவசாய நிலங்களை பேரூராட்சியின் அனுமதியின்றி வீட்டு மனை பிரிவுகளாக மாற்றம் செய்து விற்பனை செய்திட திட்ட அனுமதி செயல் அலுவலரால் வழங்கப்படுகிறது.
7. பேரூராட்சி பெற வேண்டிய 10 % திறந்த வெளி இடம் பெறப்படாமல் உள்ளது.
8. பேரூராட்சி அலுவலக கட்டிடம் கட்ட இடம் தேர்வு, கட்டுமான பணி டெண்டர், பணி ஒப்பந்தத்தில் முறைகேடு.
9. கழிவு நீர் ஊரணிக்குள் செல்வது மற்றும் ஊரணிக்குள் கட்டிடம் கட்ட அனுமதித்தது போன்ற புகார்களை தனது முறையீட்டு மனுவில் சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.136/2016/பே/ நாள்: 25.02.2016-ன்படி மேற்படி முறையீட்டு மனுதாரரின் புகார்களுக்கு விளக்கம் அளிக்க கோரி பேரூராட்சி செயல் அலுவலர், இளையான்குடி அவர்களுக்கு அறிவிப்பாணை வழங்கப்பட்டது.

புகார் மனு சம்பந்தமாக கீழ்கண்ட நபர்கள் விசாரிக்கப்பட்டனர்.

1. திரு கே.எம். ஷாகுல் ஹமீது, முறையீட்டு மனுதாரர்
2. பேரூராட்சி செயல் அலுவலர், இளையான்குடி.

மேலும் கீழ் குறிப்பிட்டவர்களின் அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டுள்ளது.

1. செயல் அலுவலர், இளையான்குடி பேரூராட்சி அவர்களின் விளக்க அறிக்கை
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குனர், சிவகங்கை அவர்களின் தல ஆய்வு அறிக்கை.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சிவகங்கை அவர்களின் தல ஆய்வு அறிக்கை நகலினை இம்முறைமன்ற நடுவ கடித எண் 136/2016/பே/நாள் 30.03.2017 மூலம் முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பி வைத்து அதன் மீது, மனுதாரரின் கருத்து கோரப்பட்டது. ஆனால் மனுதாரர் தனது கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் அறிக்கைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

இந்நிலையில், மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் நீதிப்பேராணை எண் 7400/2017ல் வழக்கு ஒன்றினையும் தாக்கல் செய்துள்ளார் என்பது உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. எனவே 2014– ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b) ன்படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்திடலாகாது. எனவே, மேற்படி சட்டக் கூறுகளின்படி இம்முறைமன்ற நடுவ விசாரணை நடவடிக்கைகளை தற்போது கைவிடலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 நாள் கையொப்பமிட்டுட அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்

–// ஆணைப்படி–அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 15/9

பெறுநர்

1.திரு. கே. எம். ஷாகுல் ஹமீது,
30/182 பெல்ஸ் சாலை,
சேப்பாக்கம்,
சென்னை – 600 005.

2.செயல் அலுவலர்,
இளையான்குடி பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம் –630 702.